**Zestaவின் தொலைக்காட்சி விளம்பரப்பட எண்ணக்கருப் போட்டி – விதிகள் மற்றும் நிபந்தனைகள்**

1. **அறிமுகம்**
   - Zesta தொலைக்காட்சி விளம்பரப்பட எண்ணக்கருப் போட்டி **"எனது Zesta கதை"** Sunshine Consumer Lanka Ltd இற்கு உரித்தானதும் ஒழுங்குபடுத்தப்படுத்தப்படுவதும் ஆகும்.
   - இப்போட்டியில் பங்கேற்பதன் மூலம் பங்கேற்பாளர்கள் இந்த விதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் கட்டுப்பட உடன்படுகின்றனர்.
2. **தகைமை**
   - இப்போட்டியில் 16 வயது அல்லது அதற்கு மேற்பட்ட எவரும் பங்கேற்கலாம்.
   - Sunshine Consumer Lanka Ltd இன் ஊழியர்கள் மற்றும் அவர்களது நெருங்கிய குடும்ப உறுப்பினர்கள் யாரும் இப்போட்டியில் பங்கேற்க முடியாது.
3. **உள்நுழையும் முறை**
   - பங்கேற்பாளர்கள் Zestaவை விளம்பரப்படுத்தும் வகையிலான தொலைக்காட்சி விளம்பரப்படத்திற்கான தமது சொந்த எண்ணக்கருவை உருவாக்கி சமர்ப்பிக்க வேண்டும்.
   - போட்டியாளர்கள் Zesta தேயிலை பக்கற் (190 கிராம் அல்லது அதற்கு மேல்) ஒன்றை கையில் வைத்திருக்கும் புகைப்படத்தை Profile படமாக வைக்க வேண்டும்.
   - 2024 ஆகஸ்ட் 10 ந்திகதிக்கு முன்பதாக Zesta நுழைவு தளம் https://www.myzestastory.com/ வழியாக தமது பதிவை சமர்ப்பிக்க வேண்டும்.
   - ஒவ்வொரு பங்கேற்பாளரும் ஒன்றுக்கு மேற்பட்ட பதிவுகளை சமர்ப்பிக்க முடியும்.
4. **போட்டியில் நுழைவதற்கு தேவையானவை**
   - தகைமையுள்ள பிரிவுகள்

     -காணொலி (Video) / ஒலி (Audio)/ நுகுப்பு (Script)/ கதைவிளக்கவுரு (Storyboard)/ Animation/ Graphics

   - தங்கள் ஆக்கம் காணொலி (Video) / Animation அல்லது ஒலி (Audio) வடிவில் இருந்தால் அவ்விளம்பரம் 15 முதல் 30 செக்கன்களுக்குள் இருத்தல் வேண்டும்.
   - சமர்ப்பிக்கப்படும் பதிவுகள் ;
     - காணொலி/Animation வடிவம் - MP4 அல்லது பதிவிறக்கம் செய்யக்கூடிய வகையில் காணொலியின் இணைப்பு (link).
     - ஒலி வடிவம் - MP3 அல்லது பதிவிறக்கம் செய்யக்கூடிய வகையில் ஒலிப்பதிவின் இணைப்பு (link).
     - கதைவிளக்கவுரு /நுகுப்பு /Graphics வடிவம் - PDF

- கோப்பின் உச்சபட்ச அளவு - 100 MB

  - ஆக்கங்கள் பங்கேற்பாளரின் சொந்தப்படைப்பாக இருக்க வேண்டுமென்பதோடு எந்தவொரு மூன்றாம் தரப்பினரின் உரிமைகளையும் அத்துமீறுவதாக இருத்தலாகாது
  - Zesta தேயிலை பக்கற் profile புகைப்படத்தில் தெளிவாக தெரியும்படி காணப்பட வேண்டும்.
  - விளம்பரம் எவ்விதத்திலும் யாரையும் தாக்கும் விதமாகவோ, தகாததாகவோ அல்லது அவமரியாதை செய்யும் விடயத்தையோ உள்ளடக்கியிருத்தல் ஆகாது.
    ஆக்கங்களின் பயன்பாடு
  - எழுமாறாக தெரிவு செய்யப்படும் ஆக்கங்கள், Sunshine Consumer Lanka Ltd. இன் பூரண விருப்புரிமையின் கீழ் போட்டியை விளம்பரப்படுத்தும் பொருட்டு பார்மபரிய அல்லது நவீன ஊடகத் தளங்களில் காட்சிப்படுத்தப்படும் (ஒளிபரப்பப்படும்).

5. **தீர்ப்பு வழங்கலும் வெற்றியாளர்களின் தேர்வும்**
   - Sunshine Consumer Lanka Ltd. இனால் தெரிவு செய்யப்பட்ட நடுவர் குழாத்தினால் ஆக்கங்கள் மதிப்பிடப்படும்.
   - புத்தாக்கம், தனித்தன்மை, வர்த்தகநாமத்துடனான (brand) பொருத்தப்பாடு மற்றும் ஒட்டுமொத்தமாக படைப்பின் தரம் ஆகிய பிரிவுகளில் மதிப்பிடப்படும்.
   - நடுவர்களின் தீர்ப்பே இறுதியும் முடிவும் ஆகும்.
   - வெற்றியாளர்களுக்கு தனிப்பட SMS/Whatsapp மூலம் தெரிவிக்கப்படும்.
6. **பரிசுகள்**
   - வெற்றியாளருக்கு ரூ. 1 மில்லியன் பணப்பரிசு (ஒரு மில்லியன் ரூபாய் மட்டுமே)
   - ரூ. 250,000 (இரு நூற்று ஐம்பதாயிரம் ரூபாய் மட்டுமே) மதிப்புள்ள 4 ஆறுதல் பரிசுகள் Sunshine Consumer Lanka Ltd. இன் விருப்புரிமையின் கீழ் வழங்கப்படும்.
   - பரிசுகளை பரிமாற்றம் செய்யமுடியாது என்பதோடு பணமதிப்புக்கு ஈடாக வேறெந்த மாற்றுப்பரிசும் வழங்கபடமாட்டாது.
7. **படைப்புகளின் மீதான உரிமை மற்றும் அறிவுசார் சொத்து உரிமைகள்**
   - பங்கேற்பாளர் இந்த படைப்பை சமர்ப்பிப்பதன் மூலமாக படைப்பின் உரிமையை Sunshine Consumer Lanka Ltd இற்கு மாற்ற/ நியமிக்க நிபந்தனைகள் ஏதுமின்றி ஒப்புக்கொள்கிறார். இதன்படி நிறுவனம் தனது விருப்புரிமையின் கீழ் எந்தவொரு ஊடகத்திலும் குறித்த படைப்பை காட்சிப்படுத்த முடியும்.

   - போட்டியில் உள்நுழைவோர் அனைவரும் ‘Zesta’ எனும் சொல், Zesta சின்னம், ‘டிங் டிங்’ ஒலி மற்றும் ‘பொதியின் காட்சி’ அனைத்தும்

Sunshine Consumer Lanka Ltd இன் பிரத்தியேக சொத்து என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். இந்த போட்டியை தவிர்த்து வேறு எங்கும் வேறெந்த தேவைக்கும் குறித்த சொல், சின்னம் மற்றும்/அல்லது ஒலிகளை பயன்படுத்த முடியாது என்பதையும் போட்டியில் உள்நுழைபவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

8. **தனியுரிமை மற்றும் தரவு பாதுகாப்பு**
   - பங்கேற்பாளர்களிடமிருந்து பெறப்பட்ட தனிப்பட்ட தகவல்கள் போட்டியை நிர்வகிப்பதற்காக மாத்திரமே பயன்படுத்தப்படும். ஒரு படைப்பு வெற்றிபெற்ற படைப்பாக தெரிவு செய்யப்படும் பட்சத்தில், படைப்பை சமர்ப்பித்த நபருக்கு Sunshine Consumer Lanka Ltd தீர்மானிக்கும் விதத்தில் குறித்த நபரின் அனுமதியோடு உரிய அங்கீகாரம் அளிக்கப்படும். இலங்கையில் நடைமுறையிலுள்ள பொருந்தும் சட்டங்களின் படி தனிப்பட்ட தகவல்களின் சேகரிப்பும் செயன்முறைப்படுத்தலும் இடம்பெறும்.

9. **பொது நிபந்தனைகள்**
   - Sunshine Consumer Lanka Ltd இற்கு தனது விருப்புரிமையின் பேரில் மாத்திரம் இந்த போட்டியை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ரத்துச்செய்ய, முடிக்க, மாற்ற அல்லது இடைநிறுத்தும் உரிமை உண்டு.
   - படைப்புகளை சமர்ப்பித்தலை பாதிக்கும் வகையில் நேரும் எவ்விதமான தொழில்நுட்ப சிக்கல்கள் அல்லது செயலிழப்புகளுக்கு Sunshine Consumer Lanka Ltd பொறுப்பேற்காது
   - போட்டியில் பங்கேற்பதன் மூலம், போட்டியில் பங்கேற்பாளர்கள் Sunshine Consumer Lanka Ltd மற்றும் Sunshine Group இன் அனைத்து நிறுவனங்களையும் போட்டியில் பங்கேற்பதிலிருந்து அல்லது அதனுடன் தொடர்புடைய எந்தவொரு குற்றச்சாட்டுகள், சேதங்கள் அல்லது பொறுப்புகளிலிருந்தும் விடுவிக்கவும் பாதுகாப்பாகவும் வைத்திருக்கவும் ஒப்புக்கொள்கிறார்கள்.

10. நிர்வகிக்கும் சட்டம்
   - இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகள் இலங்கையின் சட்டங்களின் கீழ் நிர்வாகிக்கப்படுகின்றன.

11. **தொடர்புகொள்ளல் விபரம்**
   - தொடர்பான எந்தவொரு கேள்விகள் அல்லது விசாரணைகளுக்கும், **0702 740833**

---

Sunshine Consumer Lanka Ltd. இல. 60 ஸ்ரீமத் அனகாரிக தர்மபால மாவத்தை, கொழும்பு 03.